

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2026) முகாம் அலுவலகத்தில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், 2025–ஆம் ஆண்டுக்கான “பேரறிஞர் அண்ணா விருது” அறிவித்தமைக்காக சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் சந்தித்து, தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு, “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS)” அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தார். உடன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் கே. கனகராஜ், டி.ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வருகிற 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி மாவட்ட பொருளாளர், சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் - கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளீட்ட அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: ஜன.-25 அன்று காஞ்சிபுரத்தில் கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்.

கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.




